# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 06.04.2026**

**முன்னிலை**

## திரு.பி.தாமரைக்கண்ணன், இ.கா.ப (ஓய்வு), மாநில தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். SA 11688/SCIC/2023

திரு.K.இராசதுரை, மேல்முறையீட்டாளர்
மனை எண்.32, வீட்டு எண்.282
கம்பர் சாலை, N.G.G.O.நகர்
திருப்பத்தூர் - 635 601.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர் ....... பொதுஅதிகார அமைப்பு
வட்டாட்சியர் அலுவலகம்,
திருப்பத்தூர் வட்டம் (ம) மாவட்டம் - 635 601.

**ஆணை**

1.இவ்வழக்கின் விசாரணை ஏற்கனவே 30/12/2025 அன்று ஆணையத்தால் நடத்தப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

> **"பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருப்பத்தூர் வட்டம் (ம) மாவட்டம் அவர்கள், மனுதாரர் கோரியவற்றிற்கு தொடர்புடையவற்றில் என்னென்ன ஆவணங்கள் பராமரிப்பில் உள்ளது, என்னென்ன ஆவணங்கள் மனுதாரருக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது மற்றும் என்னென்ன ஆவணங்கள் பராமரிப்பில் இல்லை என்பது குறித்த பிரமாணப் பத்திரம் (Sworn Affidavit) ஒன்றினை இவ்வாணை கிடைக்கப் பெற்ற ஒரு வார காலத்திற்குள் மனுதாரருக்கு விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பதோடு, அதன் நகலையும், மனுதாரருக்கு அனுப்பிய தகவலை அவர் பெற்றுக் கொண்டதற்கு சான்றான அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Copy of postal tracking) ஆகியவற்றினை 05/02/2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது."**

2.மேற்குறிப்பிட்டவாறு 05/02/2026-க்கு முன்னதாக 29/01/2026 அன்று திரு.விக்னேஷ், முதுநிலை வருவாய் ஆய்வாளர், திருப்பத்தூர் வட்டம் (ம) மாவட்டம் அவர்கள் ஆஜராகி, ஆணையம் உத்தரவிட்டிருந்தவாறு மனுதாரருக்கு அனுப்பி வைத்த என்னென்ன ஆவணங்கள் பராமரிப்பில் இல்லை என்பது குறித்த பிரமாணப் பத்திரத்தின் (Sworn Affidavit) நகலினையும், அதனை மனுதாரர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகலினையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.

ஒம்./-(பி.தாமரைக்கண்ணன்)
மாநில தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவி பதிவாளர்

**<u>வழக்கு எண். SA 11688/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்,
திருப்பத்தூர் வட்டம் (ம) மாவட்டம் - 635 601.

**மேல்முறையீட்டாளர்**

திரு.K.இராசதுரை,
மனை எண்.32, வீட்டு எண்.282
கம்பர் சாலை, N.G.G.O.நகர்
திருப்பத்தூர் - 635 601.

RG/PC